மலையக அரசியல் தலைவர்களே!

மலையக தொழிற்சங்க தலைவர்களே!

## உள்ளூராட்சி (பிரதேசசபை, நகரசபை, மாநகரசபை) மன்றங்களுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்கையில் மலையக பெண்களுக்கு 40% சதவீதத்தை ஒதுக்கீடு செய்யுங்கள்

- எதிர்வரும் தேர்தலில் ஏனைய அரசியல் கட்சிகளைப்போல் மலையக பெண்களுக்கும் ஆளும் சபைகளில் 40% சதவீதத்தை உறுதி செய்ய திடசங்கற்பம் பூணுங்கள்.
- நமது நாடே முதல் பெண் பிரதம மந்திரியை உலகிற்கு அறிமுகம் செய்த நாடு.
- நமது நாடே முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பெண் ஜனாதிபதியை உலகிற்கு அறிமுகம் செய்த நாடு.
- நமது நாடே அரசியலில் பெண்களுக்கு சமவுரிமை வழங்க வேண்டும் என்பதனை நடைமுறையில் காட்டிய நாடு.
- இவ்வளவு பெருமைமிக்க நாட்டில் மலையக பெண்களின் நிலை என்ன?
- நாடாளுமன்றத்தில் ஒரு மலையகப் பெண்ணும் இல்லை. பிரதேச சபைகளில் ஒரு பெண்ணும் இல்லை. மாகாண சபைகளில் ஒருவர் மட்டுமே இருக்கின்றார்.

**இந்நிலையை மாற்ற வேண்டாமா?**

- மலையக அரசியல் தலைவர்களே மலையக பெண் அரசியல் தலைவர்களுக்கு வாய்ப்பளிப்பது உங்களின் கடமையல்லவா?
- நாட்டின் ஏனைய கட்சிகளைப் போல் நாமும் நமது பெண்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டாமா?
- எமது பெண்கள் அரசியலில் பங்கேற்று நாட்டின் நிர்வாகத்தில் பங்குகொள்ள வேண்டாமா?
- மலையக பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் சாத்தியமாக வேண்டுமாயின்,
- எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தல் வேட்பாளர் பட்டியலில் 40% ஒதுக்கீட்டை மலையக பெண்களுக்கு வழங்குக.
- உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மலையகப் பெண்களின் வெற்றிக்கு உழைப்பதன் மூலம் புதிய வரலாற்றை படைத்தவர்கள் என்ற பெயரினைப் பெறுங்கள்.
- பெண்களின் அரசியல் வெற்றி ஜனநாயகத்தின் வெற்றி.

சமூக அபிவிருத்தி நிறுவகம் உழைக்கும் பெண்கள் முன்னணி

பெருந்தோட்டத்துறை சமூக மாமன்றம்

***இல. 37, போதியாங்கன மாவத்த, கண்டி. தொ.இல./நகல் 081 2202923***
**மின்னஞ்சல்:** ***kandyisd@sltnet.lk or marchwwf@gmail.com or www.isdkandy.org and pssfsl@hotmail.com***